# விரைவில் 3 நட்சத்திர பொதுக் கழிவறைகள்



தெம்பனிஸில் உள்ள '21 ஸ்திரீட்' உணவகத்தில் உள்ள இந்த கழிவறைக்கு சிங்கப்பூர் கழிவறைச் சங்கம் அண்மையில் ஐந்து நட்சத்திர விருது வழங்கியது. தூய்மை, சுற்றுப்புறத்துக்கு ஏற்ற சூழ்நிலைகள், தண்ணீர் சேமிப்பு குழாய்கள் ஆகியவற்றுக்காக இவ்விருது வழங்கப்பட்டது. **படம்: ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்**

சிங்கப்பூரிலுள்ள 30,000 பொதுக் கழிவறைகளில் 70 விழுக்காட்டை 3 நட்சத்திரத் தரத்திற்கு உயர்த்தும் மூன்றாண்டுகாலத் திட்டத்தைச் சிங்கப்பூர் கழிவறைச் சங்கம் (RAS) வெளியிட்டிருக்கிறது.

மூன்று நட்சத்திரத் தரமுள்ள கழிவறைகள் துர்நாற்றமும் குப்பைகளும் இன்றி இருப்பதோடு, அவற்றின் கழிவறை வசதிகள் செயல்படுவதோடு, கழிவறைத்தாள், சவர்க்காரம் போன்றவையும் போதிய அளவில் இருக்கும்.

தற்போது பொதுக் கழிவறைகளில் 30 முதல் 40 விழுக்காடு மட்டுமே இந்தத் தரத்தை எட்டி உள்ளன.

அனைத்து அமைப்பு பணிக் குழு தொகுத்த 70 பக்கத் திட்டத்தில், கழிவறை நடத்துபவர்கள், துப்புரவாளர்கள், உபயோகிகள் ஆகியோர் எதிர்நோக்கும் சவால்களும் எடுத்துரைக்கப்பட்டிருந்தன.

கழிவறைகளைச் சுத்தப்படுத்த சிக்கனமான முறை தேவைப்படுவதாக அறிக்கை குறிப்பிட்டது. ஏனெனில், பயிற்சி பெற்ற துப்புரவாளர்களை வேலையில் அமர்த்துவதற்குக் கூடுதல் செலவாகும் என்பதால் காப்பிக்கடைகள் போன்ற சிறிய இடங்களின் உரிமையாளர்கள் தயங்குகின்றனர்.

துப்புரவுச் சேவைகளைப் பகிர்ந்து கொள்ளுதல், கழிவறைகளைப் பயன்படுத்த கட்டணம் விதித்தல் போன்ற யோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

செயல்திறன் தரங்களும் துப்புரவாளர்களுக்கு அங்கீகாரமும் இல்லாதது மற்ற சவால்களில் உள்ளடங்கும்.

கழிவறைகளைப் பயன்படுத்துவோரின் நடத்தையை மேம்படுத்த நல்ல ஒளியமைப்பு, வெளிச்சமான நிறங்கள் போன்ற மேம்பட்ட வடிவமைப்பு தேவை என்றும் குறிப்பிடப்பட்டது.

நாசவேலைகள், முறையற்ற உபயோகம் போன்ற போக்குகளை மாற்ற விழிப்புணர்வு நடவடிக்கைகளும் சீரமைக்கப்படுவது அவசியம்.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, சிங்கப்பூர் கழிவறைச் சங்கம் முதல்முறையாக "LOO@heartlands" (குடியிருப்புப் பேட்டைகளில் கழிவறை) எனும் இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறது. ஐந்து நட்சத்திர தர மதிப்பீடு பெற்ற தெம்பனிஸ் காப்பிக் கடையில் இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது.

இயக்கத்தின் ஒரு பகுதியாக, உணவு, பானக் கடைகளின் கழிவறைகளுக்குச் செல்வோருக்கு, கழிவறையை முறையாகப் பயன்படுத்தக் கற்றுத்தரும் குறிப்புகள் கொண்ட டிஷூத்தாள் பொட்டலங்கள் விநியோகிக்கப்படும்.